# பீட்டர் மாமா

## ஆட்களை வரிசையா இழுத்துருவாங்களோன்ற கவலையில் ஓபிஎஸ் இருப்பதாக சொல்கிறார்

# wiki யானந்தா

“அணியில் இருந்து ஆட்களை தொடர்ந்து இழுக்கும் முயற்சி நடப்பதால் ஓபிஎஸ் கவலையில் இருப்பதாக சொல்கிறார்களே..” என்று கேட்டார் பீட்டர் மாமா.

“ஆமா..டிடிவி தினகரன், இபிஎஸ், ஓபிஎஸ் என மூன்று பிரிவாக அதிமுக பிளவுபட்டு நிற்கும் நிலையில் ஓபிஎஸ் அணியை குறிவைத்து டிடிவி தினகரன் தரப்பு காய் நகர்த்தி வருகிறது. ஓபிஎஸ்சை நாம்தான் அரசியலுக்கு கொண்டு வந்தோம், இன்று அவரே நம்மை எதிர்த்து அரசியல் செய்கிறாரே என்பதை சகித்துக் கொள்ள முடியாத டிடிவி தினகரன் தரப்பு ஓபிஎஸ் அணியை எப்படியாவது உடைத்து விட வேண்டும் என கங்கணம் கட்டியிருக்கிறது. அதற்காக யார் யாரை முதலில் வளைக்கலாம் என திட்டம் போட்டுள்ளது. ஓபிஎஸ் அணியில் உள்ள வாசுதேவநல்லூர் எம்எல்ஏ மனோகரனை எப்படியாவது தங்கள் அணிக்கு கொண்டு வந்துவிட வேண்டும். அவரை நகர்த்தி விட்டால் ஒவ்வொருவரும் ஓடி வந்து விடுவர் என கருதி எம்எல்ஏ மனோகரனுக்கு கூவத்தூர் ஆசையை காட்டியுள்ளனர். இதை சமீபத்தில் நடந்த பிரஸ் மீட்டில் போட்டு உடைத்து பகிரங்கப்படுத்தினார் மனோகரன். இதனால் ஓபிஎஸ் தரப்பு கவலையோடு இருக்கிறதாம். எங்கே நமது அணி பலவீனப்பட்டு விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு தொற்றிக் கொண்டுள்ளதாம். இதேபோல் ஒவ்வொரு எம்எல்ஏவையும் பண பேர ஆசையை காட்டி கலைத்து விட்டால் நமது அணி கரைந்து விடுமோ என்ற யோசனையில் இருக்கிறார்களாம்” என்றார் விக்கியானந்தா.

“முதல்வர் ஊர்ல கலெக்டரோட நடவடிக்கை அதிரடியா இருக்குதாமே..”

“மாங்கனி மாவட்டத்தில் முதல்வர் தொகுதியில் உள்ள அதிகாரிகள் எப்ப வருவாரோ, எப்படி வருவாரோன்னு கலெக்டரை கண்டு அச்சத்துல இருக்காங்களாம். இப்போதைய முதல்வர் எடப்பாடி முன்பு அமைச்சராக இருந்தபோது எப்படியும் மாசத்துக்கு 2 முறையாவது தொகுதிக்கு போயிடுவாராம். இப்ப அப்படி அடிக்கடி போகமுடியாதில்லையா. அதனால தன்னோட தொகுதியில எந்த பிரச்னையும் வராம பார்த்துக்குங்கன்னு அதிகாரிகளுக்கு வாய்மொழியா சொல்லியிருக்காராம். அதுல கலெக்டரும் அடக்கமாம். முதல்வரின் வேண்டுகோளை நிறைவேற்றுவதில் கலெக்டர் அதிதீவிரமா இருக்காராம். எப்படியும் ஒரு வாரத்துல 3 முறையாவது எடப்பாடி பக்கம் போயிட்டு வர்றாராம். அதோட எந்த நிகழ்ச்சியா இருந்தாலும் முதலில் எடப்பாடி தொகுதியில முடிச்சுட்டுதான் அடுத்த இடத்துக்கு போறாராம். அந்த தொகுதியில இருக்கிற பள்ளிக்கூடம், ரேஷன் கடை, சத்துணவு கூடம்னு விடாம ரவுண்ட் அடிக்கிறதை பார்த்து எல்லோருமே அலர்ட் ஆயிட்டாங்களாம். அதுவும் ஒரு கிராமத்துல திடீர்ன போயிட்டு திரும்ப வந்துட்டு மீண்டும் அதே ஒரு கிராமத்துல வேறு ஒரு டிபார்ட்மென்டை ஆய்வு பண்ண போறாராம். போற இடத்துலையும் இது சி.எம். தொகுதி. எந்த குறையும் இருக்க கூடாதுன்னு வேற ஸ்டாப்புகளுக்கு கிளாஸ் எடுக்கறாராம். அதனால அந்த தொகுதியில இருக்கிற அதிகாரிகள் கலெக்டர் வருவாரு.



உஷாரா இருங்கன்னு அப்பப்ப எச்சரிச்சுட்டே இருக்காங்களாம்“ என்றார் விக்கியானந்தா.

“வசதியே இல்லாம கலெக்டர் அலுவலகத்தை கட்டிட்டதா புகார் வருதாமே..”

“கோவையில் திறக்கப்பட்ட புதிய கலெக்டர் அலுவலகம்தானே. இது ரூ.19.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. தரை தளத்துடன் சேர்த்து 5 மாடி கொண்ட இக்கட்டிடத்துக்கு இதுவரைக்கும், முறையா தண்ணீர் வசதி, இருக்கை வசதி எதுவும் செய்யப்படவில்லை. அதிகாரிகளை பார்க்க வரவங்களுக்கு, தனியாக காத்திருப்போர் அறை சூப்பரா கட்டப்பட்டுள்ளது. ஆனால், இங்கு உட்கார சேர் இல்லை. பெரும்பாலான அறைகள் காலியாக இருக்கு. அதிகாரிகளை பார்க்க வரும் பெண்கள், வயசானவங்க கால்கடுக்க நின்னுட்டுதான் இருக்காங்க. இவ்வளவு பெரிய கட்டடம் கட்டிப்போட்டு, உட்கார ஒரு சேர்கூட போடவில்லையே... என மனு கொடுக்க வருகிறவர்கள் அங்கலாய்க்கின்றனர். யானை வாங்கியாச்சு... அங்குசம் கெடக்கலையே... என சிலர் கிண்டல் அடிக்கின்றனர்.

இதுஒருபுறம் இருக்க, வாரம் தோறும் திங்கள்கிழமை நடக்கும் மக்கள் குறைதீர்க்கும் முகாமில், குறைகளை சொல்லி அழ மனுவுடன் போனால், அங்கே இருக்குற அதிகாரிங்க, யாரும் கண்டுக்க மாட்டேங்கிறாங்க.... தலைகுனிந்து, மொபைல் போனை நோண்டிக்கிட்டே இருக்காங்க என பலர் புலம்புறாங்க. குறைதீர்ப்பு முகாம் டியூட்டி எனக் கூறிக்கொண்டு, பொதுமக்களோட மனுக்களை பார்க்காமல், மொபைல் போனில் வாட்ஸ்அப், பேஸ்புக், டிவிட்டர்னு சமூக வலைதளங்களில் மூழ்கி போயிறாங்க. கண்டிக்க வேண்டிய கலெக்டரும் இதை கண்டுக்காம இருக்காரு. கொடுமை, கொடுமைனு கோயிலுக்கு போனால் அங்க ரெண்டு கொடுமை தலையவிரிச்சு போட்டுட்டு ஜிங்கு ஜிங்குனு ஆடுச்சாம் என்ற பழமொழிதான் நினைவுக்கு வருது என தலைல அடிச்சுட்டு மனுவுடன் திரும்பி போறாங்க” என்றார் விக்கியானந்தா.

“வேலூர் மாவட்ட மணல் கடத்தல் விவகாரத்தில் பல மர்மங்கள் இருப்பதாக சொல்கிறார்களே..” என்று ஆச்சர்யத்தோடு கேட்டார் பீட்டர் மாமா.

“வேலூர் மாவட்டத்தில் அமைச்சர் ஒரு அணியாகவும், மாவட்டச் செயலாளர் பார்த்திபன் ஒரு அணியாகவும் செயல்பட்டு வருகின்றனர். சில நாட்களுக்கு முன் மாவட்டச் செயலாளருக்கு வேண்டிய ஒருவர் மணல் கடத்தல் வழக்கில் சிக்கினாராம். அவரை விடுவிக்க வேண்டும் என்று டிஎஸ்பி அலுவலகத்துக்குச் சென்று முறையிட்டாராம். ஆனால் டிஎஸ்பி மறுத்து விட்டாராம். இந்த கோபத்தில் தனது தொகுதியில் உள்ள டிஎஸ்பியை மாற்றிக் காட்டுகிறேன் பார் என்று சபதம் விட்டு, ஒவ்வொரு அதிகாரியாகப் பார்த்து புகார் செய்தாராம். ஆனால், அந்த டிஎஸ்பி நேர்மையானவர் என்பதால் மாற்ற முடியவில்லையாம். இந்த கோபத்தில், அந்த டிஎஸ்பி மணல் மாபியாவுக்கு வேண்டியவர் என மொட்டை பெட்டிஷனை தட்டிவிட்டாராம். பத்திரிகையில் செய்தியும் வெளியானதாம். இது குறித்து உளவுத்துறை விசாரித்து விட்டு தகவல் தவறானது என்று அறிக்கையும் கொடுத்து விட்டார்களாம். இப்போது என்ன செய்வது என்று பார்த்திபன் கையை பிசைந்து வருகிறாராம்” என்று சொல்லி முடித்தார் விக்கியானந்தா. ■

---

### வாட்ஸ்அப் ட்ரெண்டிங்

எங்க பொண்ண கட்டிக்கொடுத்தா மாப்பிள்ளை சந்தோஷமா வச்சிக்குவாரா?



என்ன இப்படி கேட்டுட்டீங்க... அவர் ஏற்கனவே ரெண்டு பொண்ணுங்களை சந்தோஷமா வெச்சிருந்தவர்தான்!

### மிஸ்டர் பிராப்ளம்



தினகரன் ஆதரவு எம்எல்ஏ வெற்றிவேல், எடப்பாடி அணிக்கு இப்போது பெரும் பிரச்னையாகியிருக்கிறார். சட்டவிதிகள் கூட தெரியாதவர்கள் என எடப்பாடி அணியை வெற்றிவேல் விமர்சித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த அணியைச் சேர்ந்த 7 எம்எல்ஏக்கள், நாவை அடக்கிப் பேச வேண்டும் என வெற்றிவேலுக்கு காட்டமாக பதில் கொடுத்துள்ளனர்.

### டிப்ஸ்

துவரம் பருப்பை வேக வைக்கும்போதே தேங்காய் துண்டு ஒன்றை நறுக்கிப் போட்டால் பருப்பு சீக்கிரம் வேகும்.




---

### சொல்லிட்டாங்க...



உயிரை காக்க வேண்டிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரே உயிரைப் பறிக்கும் செயலில் ஈடுபட்டிருப்பதால் அவரை பதவிநீக்கம் செய்து கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

\- திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின்.



ஆட்சி, அதிகாரத்துக்காக காங்கிரஸ் மற்றும் பாஜ கட்சிகள் சமீப காலமாக தங்கள் சுயமரியாதையையும், கட்சியின் மூல கொள்கைகளையும் காலில் போட்டு மிதித்து வருகிறார்கள்.

\- முன்னாள் பிரதமர் தேவே கவுடா.



குட்கா விவகாரத்தில் அமைச்சர் விஜயபாஸ்கர் முதல் அதிகாரிகள் வரை லஞ்சம் பெற்றதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

\- மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன்.



ஒரு பாதை குறுகிய மனப்பான்மையை நோக்கி செல்கிறது. மற்றொரு பாதை ஏழைகள், பெண்கள், அனைத்து சமுதாய மக்கள் மேம்பாட்டை நோக்கி செல்கிறது.

\- காங்கிரஸ் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மீராகுமார்.

---


சரக்கு மற்றும் சேவைவரிக்கு தயாராகுங்கள் » சரக்கு மற்றும் சேவைவரி 1 ஜூலை, 2017 முதல் அமலாகிறது

1 நாடு 1 வரி 1 சந்தை



## அதிகளவு பதிவேடுகளை பராமரிப்பதிலிருந்து விடுதலை

### ஜிஎஸ்டி கீழ், ஒரு பதிவேடு போதுமானது

#### கணக்குகள் மற்றும் பதிவேடுகள்

1. சரக்கு மற்றும் சேவைவரியில் கீழ்ப்படிவு சரிபார்த்தல் பராமரிக்கப்படும் கணக்குகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படும், தேவைப்பட்டால் மட்டும்.
2. ஒரு வரி, ஒரு வகை பதிவேடு: மதிப்புக்கூட்டு வரி, கலால் மற்றும் சேவைவரி சகாப்தத்தில் இருந்ததை போன்று பல்வேறு வகை வரிகளுக்காக தனித்தனி பதிவேடுகளை பராமரிக்க வேண்டியதில்லை.
3. கணக்குகள் & பதிவேடுகளின் மாதிரியை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், மேலும் தேவையான தகவல் மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளன. பதிவேடுகள் கணினி அச்சுப்பிரதிகள் அல்லது மின்னணு பதிவேடுகள் உட்பட காகிதம்-சார்ந்த ஆதார ஆவணங்கள் வடிவில் எடுத்துக் கொள்ளலாம்.
4. கேட்கப்பட்ட பதிவேடுகளாவன:-
   அ) ஒரு நபர் தன்னுடைய வர்த்தக நிகழ்விலான வழங்கல்கள் அல்லது பெறுபவைகளான சரக்குகள் மற்றும் சேவைகளின் அனைத்து பதிவேடுகள்.
   ஆ) இறக்குமதி செய்த சரக்குகளின் அனைத்து பதிவேடுகள்; மற்றும்
   இ) சரக்கு மற்றும் சேவைவரிக்குரிய அவருடைய பொறுப்புகளை காட்டும் ஒப்பந்தங்கள் மற்றும் விலைப்புள்ளி போன்ற அனைத்து பிற ஆதரவு ஆவணங்கள்.
5. மின்னணு ஜிஎஸ்டி: பதிவேடுகள் மின்னணு முறையிலும் பராமரிக்கப்படலாம்.
6. சிற பிரிவு வரிசெலுத்தும் நபர்கள் வரையறுக்கப்பட்டவாறு பதிவேடுகளை வைத்திருக்க மேலும் பராமரிக்க முடியாதவிடத்தில், ஆணையர் வரையறுக்கப்பட்டவாறு இல்லாது பதிவேடுகளை பராமரிக்க அவர்களை அனுமதிக்கலாம்.
7. 2 கோடிக்கு குறைவான விற்றுமுதல் கொண்ட வரிவிதிப்புக்குரிய நபர்கள் தங்கள் கணக்குகளை தணிக்கை செய்ய வேண்டியதில்லை அல்லது ஆண்டு ரிட்டன்களுடன் சமரச அறிக்கை சமர்ப்பிக்கலாம்.
8. முகவர்கள், போக்குவரத்து மற்றும் இருப்புகிடங்கு பராமரிப்போர் வைத்திருக்க வேண்டிய எளிய பதிவேடுகள்:

   முகவர்கள் : ஒரு முகவராக பணியாற்றும் நபர் ஒருவர் முதன்மை நிறுவனம் சார்பாக பெற்ற அல்லது வழங்கிய சரக்குகள் அல்லது சேவைகளின் விவரம், மதிப்பு மற்றும் அளவு (பொருந்துமாறு) ஆகியவற்றை விளக்கும் பதிவேடுகள், மற்றும் ஒவ்வொரு முதன்மை நிறுவனத்துக்கும் அளிக்கும் கணக்கு விவரங்களை பராமரிக்க வேண்டும்.

   போக்குவரத்து நடத்துவோர் : சரக்கு போக்குவரத்து வர்த்தகத்தில் ஈடுபடும் நபர் அவரால் எடுத்து செல்லப்பட்ட & விநியோகிக்கப்பட்ட, மேலும் போக்குவரத்தில் உள்ள இருப்பு சரக்குகளின் எளிய சரக்கு பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.

   இருப்புகிடங்கு பராமரிப்போர் : இருப்புகிடங்கு மற்றும் கிட்டங்கி நடத்தி வரும் நபர் இருப்புகிடங்கு அல்லது கிட்டங்கியில் சரக்கு விநியோகம், போக்குவரத்து, பெறுதல், அகற்றுதல் மேலும் சரக்கு இருப்பு இருக்கும் காலம் தொடர்பான பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும்.

ஜிஎஸ்டி விசாரணைக்கு @askGST_GoI டுவிட் செய்யவும்

மத்திய கலால் மற்றும் சுங்கம் வாரியம் &
மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் வணிகவரித் துறைகள்
www.cbec.gov.in

davp 15502/13/0071/1718